


மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயக்குமார் அவர்கள், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை சார்பாக, கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், ஈச்சன்விளை அரசு உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்ற மருத்துவ முகாமினை இன்று (24.02.2017) குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, பார்வையிட்டார். தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு.எம்.சேவியர் மனோகரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 138/2017 நாள்:24.02.2017

**மாநிலங்களவை உறுப்பினர் திரு.அ.விஜயக்குமார் அவர்கள், தமிழக அரசின் சார்பாக, இன்று (24.02.2017) நடைபெற்ற மருத்துவ முகாமினை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, பார்வையிட்டார்.**

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை சார்பாக, தமிழ்நாடு முழுவதும் 690 சிறப்பு மருத்துவ முகாம்கள் இன்று நடைபெறுகிறது.

அதனடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், ஈச்சன்விளை அரசு உயர்நிலைப்பள்ளியில், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை சார்பாக, இன்று (24.02.2017) மருத்துவ முகாம் நடைபெற்றது. இதனை, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயக்குமார் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, பார்வையிட்டார்.

இம்முகாமில், ரூபெல்லா தடுப்பூசி முகாம், இரத்தழுத்த பரிசோதனை, கண் பரிசோதனை மற்றும் பொது மருத்துவம் ஆகியவற்றிற்கான பரிசோதனைகள் காலை முதல் மாலை 4 மணி வரை நடைபெறுகிறது. மேலும், இம்முகாமில் நிலவேம்பு குடிநீர் பொதுமக்களுக்கு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்தது. இதனையும், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயக்குமார் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்து, நோயாளிகளுக்கு உரிய மருத்துவ சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கிட மருத்துவர்களை கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில், தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு.எம்.சேவியர் மனோகரன், வட்டார மருத்துவ அலுவலர் மரு. விஜயா (அகஸ்தீஸ்வரம்), வட்டார சுகாதார அலுவலர் திரு. வர்கீஸ் ராஜா, அரசு வழக்கறிஞர் திரு. ஞானசேகரன், திரு. சந்தையடி பாலகிருஷ்ணன், திரு. என்.என்.ஸ்ரீஜயப்பன், திரு. கனகராஜன், திரு. ராஜேஷ், அரசு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.